# புலம் பெயர்ந்த மலேசிய தமிழரும் தமிழின் வாழ்வியலும்

*முனைவர் க. ஜோதி முருகன்*
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15526522

**முன்னுரை**

*பண்டைய காலம் முதலே தமிழர்கள் உலகம் முழுமையும் பரவி வாழ்ந்து வருகின்றார்கள். தமிழர்களின் பாரம்பரியமும், பண்பாடும், நாகரிகமும் மலேசியாவில் வேரூன்றி தமிழர்களின் தமிழ் பழமையையும், தொன்மையையும் பறைசாற்றி வருகின்றது. மலேசியாவிற்கும் தமிழகத்திற்கும் இரண்டாயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடர்பு இருப்பதாக அறியப்படுகிறது. கிபி 14 & 15 ஆம் நூற்றாண்டுகளில் விஜயநகர பேரரசு ஆட்சி காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர்களின் வாணிபம் தொடர்ந்து சிறந்து விளங்கியது. கிபி 18 & 19 ஆம் நூற்றாண்டுகளில் மலேசியாவிற்கு தமிழர்களை கடை நிலை வேலைக்கு கப்பல் வழியாக அழைத்துச் சென்றார்கள். மலேசியாவில் 1870 ஆம் ஆண்டு முதல் இந்தியர்கள் ஆங்கிலேயரால் குடியேற்றப்பட்டார்கள். மலேசியாவில் தற்போது மக்கள் தொகை இந்தியாவின் சு தந்திரத்திற்குப் பின் பல மடங்கு அதிகரித்தது. இன்றைய மலேசியா தொழில் முதல் எல்லா துறைகளிலும் சிறந்து வளர்ந்து வருகிறது.*

**மலேசியாவில் தமிழ் பள்ளிகள்**

*தமிழர்கள் தாயகத்தில் இருந்து மலேசியாவிற்கு வந்தவர்கள். முதலில் வீட்டு வேலைகள் மற்றும் கடைநிலை வேலைகள் போன்றவற்றிற்கு மட்டுமே மலேசியாவிற்குப் புலம் பெயர்ந்தார்கள். அதன் பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு தன் உற்றார் உறவினர்களையும் அழைத்து வந்தார்கள். அவ்வாறு வந்தவர்கள் திருமணம் செய்து குடியிருக்க ஆயத்தமானார்கள். அவர்களின் குழந்தைகளுக்கு தமிழ் மொழியை கற்பிக்கும் பள்ளிகளாக கூடாரம் உருவாக்கம் பெற்றது அதன் வளர்ச்சி பின்னால் மலேசியாவில் வாழும் தமிழருக்கு தமிழ் போதிக்கும் பள்ளிகளாக உருவாக்கப்பட்டன அதன் வளர்ச்சி பின்னால் 500 மேற்பட்ட பள்ளிகள் தோன்றின.*

**மலேசியாவின் தமிழ் எழுத்தாளர்கள்**

*மலேசியாவில் அமைந்திருக்கும் தேசிய மொழியில் மலேசியாவின் பூர்வீகக்குடிகள் மட்டுமே எழுத முடியும் என்று இருக்க அதனை எதிர்த்து முறியடிக்கும் படியாக தமிழ் எழுத்தாளர்கள் ஆன*

- *உதய சங்கர்*
- *சரோஜா தேவி*
- *கோபால கிருசுசுணன்*
- *பத்மாவதி கிருசுசுணன்*
- *கலியபெருமாள்*
- *கேசவன்*
- *சண்முகன்*
- *இராஜேந்திரன்*

*போன்ற தமிழ் எழுத்தாளர்கள் தம் மொழியில் சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், இலக்கியம் போன்றவற்றை தமிழில் எழுதி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

### மலேசியாவின் தமிழ் பத்திரிக்கைகள்

*புலம் பெயர்ந்த தமிழர்கள் தம் கருத்தை வெளிப்படுத்தவும் தம் அறிவுச் சிந்தனையை மேம்படுத்தவும் மலேசியாவில் தமிழருக்கு என்று தமிழ் மொழியில் பத்திரிக்கை தொடங்கி நடத்தி வந்தனர். அப்பத்திரிகையில் தமிழரின் கருத்துகள் வெளியிடப்பட்டது. அவை கீழ் வருமாறு*

- *தின முரசு*
- *மக்கள் ஓசை*
- *தமிழ்க் குரல்*
- *மலேசிய நண்பன்*
- *தமிழ் நேசன்*

*போன்ற பத்திரிகைகள் மலேசியாவில் குறிப்பிடத்தக்கதாகும்.*

### மலேசியாவின் தமிழ் சங்கம்

*மலேசியாவின் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்க தமிழ் சங்கம் தோன்றி சிறப்பாக நடந்து வந்தது. அவற்றில்*

- *தமிழ் எழுத்தாளர் சங்கம்*
- *இந்திய மொழி எழுத்தாளர் சங்கம்*

*என்று இரண்டு சங்கங்கள் செயல்பட்டு வந்தது. இச்சங்கத்தில் தமிழ் எழுத்தாளர்கள் எழுதி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மலேசியாவில் முதல் உலகத் தமிழ் மாநாடு கோலாலம்புரில் 1966 ஆம் ஆண்டு நடைபெற்றது.*

### மலேசியாவில் தமிழர் கணினி வளர்ச்சி

*மலேசியாவின் கணினியில் முரசு என்ற மென்பொருளைப் பயன்படுத்தி தமிழ் மொழியின் வாயிலாக பல ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். இன்று பல மென்பொருட்களைப் பயன்படுத்தி ஆய்வு பணிகளை திறம்பட நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

### மலேசியாவில் தமிழ் பாடம்

*மலேசியாவில் நடைபெறக்கூடிய அனைத்து பொதுத் தேர்வுகளிலும் (STMP) என்ற அமைப்பு நடத்தக்கூடிய அனைத்து பள்ளிகளிலும் தமிழ் பாடம் கற்பிக்கப்பட்டு அதன் மூலம் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

### மலேசியாவில் தமிழர் திருநாள்

*கோ. சா. தமிழ்வேள் என்பவர் முதன் முதலில் தமிழ் முரசு பத்திரிக்கை நடத்திவந்தார். அதன்பின் அதன் மூலம் மலேசியாவில் வாழும் ஒட்டுமொத்த தமிழர்களை ஒருங்கிணைத்து 1952 ஆம் ஆண்டு முதல் தமிழர் திருவிழா மலேசியாவில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்திருவிழாவில் தமிழர் சிந்தனைகளை வெளிப்படுத்தும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவற்றை எழுதி வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

### முடிவுரை

*இவ்வாறு ஒரு மொழியின் வரலாற்றையும், வளர்ச்சியையும் பார்க்கும் போது அம்மொழி பேசும் மக்கள் இனத்தையும் அவர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் பார்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் தமிழ் மொழி மலேசியாவில் நன்கு சிறப்புற வளர்ச்சி பெற்று இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

### பார்வை நூல்கள்


1. *தமிழ் இலக்கிய வரலாறு - ம.து.ச. விமலானந்தன்*
2. *மலேசிய தமிழர் - செம்மூதாய் பதிப்பகம்*